**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 02 ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.01/2024**
**in**
**O.S.No.29/2021**

பூமயில்
(தனது அதிகார முகவரான
செந்தில்மாரியப்பன் மூலம்) ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பேச்சியம்மாள்
2. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
சாயல்குடி. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. தமிழக அரசு அதன் மாவட்டப்
பிரதிநிதிகளில் ஒருவரான இராமநாதபுரம்
மாவட்ட ஆட்சித்தலைவர்.
4. கண்ணன்
5. செந்தில்குமார்
6. ராமமூர்த்தி
7. பஜுரூல் ரகுமான்
8. மாரிமுத்து

இந்த இடைநிலை மனு என் முன்பாக 23.02.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.உதுமான் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜெகன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் மனுவில் அசல் வழக்கில் கண்ட வாதி மனுதாரருக்கு கடந்த 03.02.2024ம் தேதி எழுதிக்கொடுத்த அதிகார ஆவணத்தை அனுமதித்து மனுதாரரை வாதியின் அதிகார முகவராக இருந்து வழக்கு நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கின் வாதியின் மகன் வழிப்பேரன் என்றும், வாதிக்கு தன்னுடைய வயது முதிர்வின் காரணமாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவின் காரணமாகவும், மனுதாரரின் பாட்டியால் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்த முடியாத நிலையில், இவ்வழக்கை நடத்தவும் வழக்குரைஞர் நியமிக்கவும் மனுதாரர் சாட்சி சொல்லவும், அவருக்காக மனுதாரர் கையொப்பம் செய்யவும் மனுதாரருக்கு 03.02.2024ம் தேதி அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது என்றும், மனுதாரர் வாதிக்காக அவருடைய அதிகார முகவராக இருந்து வழக்கை நடத்த வாதி மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த 03.02.2024ம் தேதியிட்ட அதிகார ஆவணத்தை அங்கீகரித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கண்ட விசயங்களில் இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை மறுக்கப்படுகிறது என்றும், வாதியின் வழக்குப்படி அந்த சங்கதி வாதி பூமயிலை தவிர வேறு எந்த நபர் அறிவிற்கும் எட்டவில்லை என்றும், பூமயிலின் அறிவிற்கு மட்டுமே எட்டியிருப்பதாக கூறும் சங்கதியை நிரூபிக்கும் பொறுப்பு பூமயிலை தவிர வேறு யாருக்கும் சார்ந்து போகாது என்றும், வழக்கின் சங்கதியை பொறுத்து பூமயிலை தவிர இந்த அதிகார முகவரின் அறிவிற்கு எட்டாது என்றும், இந்திய சாட்சிய சட்டப்படி இந்த அதிகார முகவர் செந்தில்மாரியப்பன் அவருக்கு தெரியாத விஷயத்தை பொறுத்தும் அவர் அறிவிற்கு எட்டாத சங்கதிகளை பொறுத்தும் அதிகார முகவர் நிலையில் சாட்சியம் அளிக்க அனுமதி கோருவது

சட்டப்படி அனுமதிக்க முடியாது என்றும், பிரிவு 101 of Indian Evidence Act ன் படி நிரூபிக்கும் பொறுப்பு வாதி பூமயிலை தவிர வேறு யாருக்கும் சாராது என்றும், மேலும், பிரிவு 106 of Indian Evidence Act ன் படி ஒருவருடைய அறிவிற்கு மட்டுமே சிறப்பாக தெரிந்து கொள்ள சங்கதியை நிரூபிக்கும் பொறுப்பானது எந்த சங்கதியேனும் ஒருவரின் அறிவிற்கு மட்டுமே எட்டியிருக்கும் போது அந்த சங்கதியை நிரூபிக்கும் பொறுப்பு அவரையே சார்ந்தது என்றும், அதன்படி இவ்வழக்கில் ஏமாற்றி மோசடியாக பூமயிலிடமிருந்து இனாம் செட்டிமெண்ட் ஆவணம் பெற்று விட்டதாக கூறுவது வாதி பூமயிலை தவிர வேறு யாரும் கூறவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>4 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> :**

வாதி தாவாச் சொத்தை பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மென்டு மூலம் கடந்த 10.10.2017 ம் தேதி பாத்தியம் செய்து கொடுத்துள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து கிரைய ஆவணங்கள் ஏற்பட்டு அனுபவத்தில் இருந்து வரும் விபரம் வாதிக்கும் அவரது மகனுக்கும் நன்கு தெரியும் என்றும், தாவாச் சொத்தைப் பொறுத்து இனாம் செட்டில்மென்டு எழுதிக்கொடுத்து 3 ஆண்டுகள் கழித்து மேற்படி வழக்கை தாக்கல் செய்து வாதி தரப்பில் வாதி 1 வது சாட்சியாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தும், மேற்படி வாதியை 1 ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 08.01.2024 ம் தேதி குறுக்கு விசாரணை செய்துள்ள நிலையில் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதில்லை என்றும், வாதியால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்று கருதும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் விசாரணை செய்வதற்கு உரிய வழிமுறை இருந்து வரும் நிலையில் வாதி சாட்சி சொல்லும் பட்சத்தில் உண்மையை கூறிவிடுவார் என்று எண்ணி தற்போது மேற்படி வழக்கு குறுக்கு விசாரணையில் இருந்து வரும் நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் வாதி வயது முதிர்வின் காரணமாகவும், உடல்நிலை குறைவின் காரணமாகவும், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத நிலையில் இம்மனுதாரருக்கு 03.02.2024 ல் பொது அதிகாரத்தை கொடுத்து அதனடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்து மேற்கொண்டு வழக்கினை நடத்திட அதிகாரம் வழங்கியுள்ளதாக தெரிவித்து மேற்கண்ட பொதுஅதிகார ஆவணம் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி வாதியை ஏமாற்றி மோசடி செய்து இனாம் செட்டில்மென்ட் எழுதி வாங்கியுள்ளார் என்றும், மேற்கண்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரமும் அதை பொறுத்து இதர பரிகாரங்களும் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளவாறு வாதியை 1ம் பிரதிவாதி ஏமாற்றி மோசடி செய்து மேற்கண்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளாரா என்ற சங்கதிகளானது வாதிக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் தெரிந்த சங்கதிகளாகும். அவ்வாறு ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்த சங்கதியை பொறுத்து நிரூபிக்கும் பொறுப்பானது அவரையே சார்ந்ததாகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 ன் படி **"When any fact is especially within the knowledge of any person, the burden of proving that fact is upon him."** என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு ஒருவரின் அறிவிற்கு மட்டுமே குறிப்பிட்ட சங்கதி தெரிந்துள்ள நிலையில் அதனை அவரது பொது அதிகார முகவர் சாட்சியம் அளித்து நிரூபிக்க முடியாது என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகள் ஏற்கத்தக்கதாக உள்ளது.

மேலும் 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுதாரர் தாவா சொத்தினை திட்டமிட்டு அபகரிக்கும் நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்தைப் பொறுத்து இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்னர் 3 ஆண்டுகள் காலதாமதமாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கினை காலதாமதப்படுத்திவிட்டு வாதியை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் மேலும் வழக்கினை காலதாமப்படுத்தும் நோக்கத்திலேயே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகளானது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. எனவே இம்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது ஏற்கத்தக்கதாக இல்லை என தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 02.03.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.02 16:09:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.02 16:09:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2023
in
O.S.No.103/2019

Date:02.03.2024
IA order